**இயக்க ஊர்தி விபத்துக் கோரிக்கை தீர்ப்பாயம், சங்கரன்கோவில்**

**முன்னிலை:- திரு. எஸ். சந்திரசேகர், பி.ஏ., எல்.எல்.பி.,**
**இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை தீர்ப்பாய நடுவர்**

**2022ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19ம் நாள் புதன்கிழமை**

**இயக்க ஊர்தி விபத்துக் கோரிக்கை அசல் மனு எண்.83/2019**
(TNTL190009452019)

1. பாப்பாத்தி
2. சங்கீதா
3. காந்தியம்மாள்
4. இளவர் ராமலட்சுமி
5. இளவர் சங்கர்
6. பொன்னுத்தாய்

*(4,5 இளவர் மனுதாரர்கள் தங்களது தாயாரும், அடுத்த சிநேகிதியுமான 6ம் மனுதார் மூலம்)*

. . . மனுதார்கள்

/எதிர்/

1. தங்கராஜ்
2. செல்வம்
3. யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், புளியங்குடி, அதன் கிளை மேலாளர் மூலம்

. . . எதிர்மனுதார்கள்

இம்மனுவானது கடந்த 19.09.2022ஆம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. N. அருணாச்சலம் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள், நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால், தோன்றா தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டும், மனுதார்கள் தரப்பில் நிகழ்த்திய வாதுரையைக் கேட்டறிந்தும், சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை

செய்தும், இன்றுவரை இவ்வாயத்தின் பரிசீலனையில் இருந்து வந்த நிலையில், இன்று இத்தீர்ப்பாயம் வழங்கிடும்,

## <u>தீ ர் வ ளி ப் பு</u>

எதிர்மனுதார்களிடமிருந்து ரூ.25,00,000/- இழப்பீட்டுத் தொகையும், மேற்படி தொகைக்கு மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து வட்டி மற்றும் செலவுத்தொகை கோரியும் இயக்க ஊர்திச் சட்டம் பிரிவு 166-ன்கீழ் மனுதார்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்</u>:

கடந்த 09.03.2018ம் தேதி மாலை சுமார் 05.15 மணியளவில், பொன்னுச்சாமி என்பவரும் அவரது நண்பரான முருகன் என்பவரும், சிந்தாமணிக்கு வடபுறம் உள்ள பெட்ரோல் பங்க் எதிரில் உள்ள பெட்டிக்கடையில் கலர் குடித்துவிட்டு, ஷை பொன்னுச்சாமிக்கு சொந்தமான TN72 U 3708 என்ற பதிவெண்கொண்ட இரு சக்கர வாகனத்தில், ஷை சாலையை மேற்கிலிருந்து கிழக்காக கடந்து, தெற்கு பார்த்துவந்தபோது, அதே சாலையில் வடக்கிலிருந்து தெற்காக, இந்நிர் 1ம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்டு, 3ம் எதிர்மனுதார் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட TN76 X 1009 என்ற பதிவு எண் கொண்ட ஈச்சர் லாரியை அதன் ஓட்டுநரான 2ம் எதிர்மனுதார் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், சாலை விதிகளை கடைபிடிக்காமலும் ஓட்டிவந்து, ஷை பொன்னுச்சாமி ஓட்டிவந்த வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றும், ஷை விபத்தில் ஷை இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த பொன்னுச்சாமி சம்பவ இடத்திலேயே இறந்துபோனார் என்றும், தகவலின்பேரில் புளியங்குடி காவல்நிலையத்தில் குற்ற எண்.694/2018 என குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், விபத்தின்போது ஷை பொன்னுச்சாமிக்கு

வயது 43 என்றும், விபத்திற்கு முன்பு ஷை பொன்னுச்சாமி பஞ்சுமிட்டாய் வியாபாரம் செய்து, மாதம் ஒன்றுக்கு ரூ.18,000/- சம்பாதித்து வந்தார் என்றும், 1ம் மனுதார், ஷை பொன்னுச்சாமியின் முதல் மனைவி என்றும், 2ம் மனுதார் ஷையார்களுக்கு பிறந்த மகள் என்றும், 3ம் மனுதார் ஷை பொன்னுச்சாமியின் தாயார் என்றும், 6ம் எதிர்மனுதார், ஷை பொன்னுச்சாமியின் இரண்டாவது மனைவி என்றும், 4,5 மனுதார்கள் ஷையார்களுக்கு பிறந்த மக்கள் என்றும், ஷை பொன்னுச்சாமியின் இறப்பினால் மனுதார்களுக்கு சொல்லொண்ணா பேரிழப்பு ஏற்பட்டுள்ளது என்றும், விபத்திற்கு, 1ம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட வாகனத்தை ஓட்டிவந்த 2ம் எதிர்மனுதாரே காரணம் என்றும், எனவே, எதிர்மனுதாரர்கள், மனுதார்களுக்கு ரூ.25,00,000/- இழப்பீடாக வழங்க உத்தரவிடவேண்டும் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. இம்மனுவின்பேரில், எதிர்மனுதார்களுக்கு இவ்வாயத்தின் மூலம் அழைப்பாணைகள் அனுப்பப்பட்டு, ஷை அழைப்பாணைகளை எதிர்மனுதார்கள் பெற்றுக்கொண்டும், இவ்வாயத்தின் முன்பு முன்னிலை ஆகவில்லை. எதிர்மனுதார்கள், நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றா தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ளார்கள்.

4. மனுதார்களின் மனுவுரை மற்றும் வழக்கு ஆவணங்கள் ஆகியவைகளை பரிசீலனை செய்த இத்தீர்ப்பாயம், இம்மனுவில் கீழ்க்கண்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டியது அவசியம் என கருதுகிறது.

**தீர்வு காண வேண்டிய விசயம்:**

1. வழக்கு விபத்துக்கு யாருடைய அதிவேகம் மற்றும் அஜாக்கிரதை காரணம்?

2. எதிர்மனுதார்கள், மனுதார்களுக்கு இழப்பீடு கொடுக்கக் கடமைப்பட்டவர்களா?

3. மனுதாரர்கள் கோரியுள்ள இழப்பீடு தொகை அவர்களுக்குக் கிடைக்கக்கூடியதா?

4. மனுதார்களுக்கு கிடைக்கக் கூடிய இதர பரிகாரம் என்ன?

5. மனுதார்களின் இம்மனுவின்பேரில், மனுதார்கள் தரப்பில் ம.சா.1 மற்றும் ம.சா.2 விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.17 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதார்கள் தரப்பில், யாதொரு சாட்சியமோ, சான்றாவணங்களோ முன்னிறுத்தப்படவில்லை. மனுதார்கள் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. சாட்சிய சான்றாவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டன.

6. **<u>தீர்வு எண்.1</u>:**

கடந்த 09.03.2018ம் தேதி மாலை சுமார் 05.15 மணியளவில், சிந்தாமணிக்கு வடபுறம் உள்ள பெட்ரோல் பங்க் எதிரில் உள்ள பெட்டிக்கடையில் இருந்து, பொன்னுச்சாமிக்கு சொந்தமான TN72 U 3708 என்ற பதிவெண்கொண்ட இரு சக்கர வாகனத்தில், ஷை பொன்னுச்சாமி ஷை சாலையை மேற்கிலிருந்து கிழக்காக கடந்து, தெற்கு பார்த்துவந்தபோது, அதே சாலையில் வடக்கிலிருந்து தெற்காக இந்நிர் 1ம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்டு, 3ம் எதிர்மனுதார் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட TN76 X 1009 என்ற பதிவு எண் கொண்ட ஈச்சர் லாரியை அதன் ஓட்டுநரான 2ம் எதிர்மனுதார் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், சாலை விதிகளை கடைபிடிக்காமலும் ஓட்டிவந்து, ஷை பொன்னுச்சாமி ஓட்டிவந்த வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்பதை நிரூபணம் செய்ய மனுதார்கள் தரப்பில், 1ம் மனுதார் ம.சா.1ஆகவும், தனிநபர் சாட்சியான மாரியப்பன் என்பவர் ம.சா.2ஆகவும் விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1, ம.சா.ஆ.2,

ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.5 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேலும், ஷை ம.சா.1, ம.சா.2 ஆகியோர்களின் சாட்சியங்கள் மற்றும் ம.சா.ஆ.1, ம.சா.ஆ.2, ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.5 ஆவணங்களை ஒருசேர ஆராய்கையில், வழக்கு விபத்தானது, 1ம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட TN76 X 1009 என்ற பதிவு எண் கொண்ட ஈச்சர் லாரியை விபத்தின்போது ஓட்டிவந்த அதன் ஓட்டுநரான 2ம் எதிர்மனுதாரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையால்தான் நடந்துள்ளது புலனாகிறது. மேலும், எதிர்மனுதார்கள் ஷை சங்கதி குறித்து மறுத்து எவ்வித கட்சியும் செய்யாமலும், எவ்வித சாட்சிய, சான்றாவணங்களை முன்னிறுத்தாமலும், இவ்வாயத்தின் முன்பு தோன்றா தரப்பினராகியுள்ளார்கள். எனவே, வழக்கு விபத்தானது, 1ம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட TN76 X 1009 என்ற பதிவு எண் கொண்ட ஈச்சர் லாரியை விபத்தின்போது ஓட்டிவந்த அதன் ஓட்டுநரான 2ம் எதிர்மனுதாரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையால்தான் நடந்துள்ளது என இவ்வாயம் முடிவு செய்து, அவ்வாறே இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

7. **தீர்வு எண்.2**

மனுதாரர்கள் தங்களது மனுவில், வழக்கு விபத்தில் ஷை பொன்னுச்சாமி இறந்துபோய்விட்டார் என்றும், இந்நிர் மனுதார்கள்தான் ஷை பொன்னுச்சாமியின் சட்டக்கால் வாரிசுகள் என்றும், இவ்வழக்கு விபத்தானது 1ம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட வாகனத்தை விபத்தின்போது ஓட்டிவந்த 2ம் எதிர்மனுதாரரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டுள்ளது என்றும், 2ம் எதிர்மனுதாரரின் வாகனமானது 3ம் எதிர்மனுதார் காப்பீட்டு கழகத்தில் காப்பீடு செய்யப்பட்டு, ஷை காப்பீடானது விபத்து சமயத்தில் ஊர்ஜிதத்தில் இருந்துள்ளது என்றும், எனவே, ஷை பொன்னுச்சாமிக்கான இழப்பீட்டை எதிர்மனுதார்கள் கூட்டாகவும், தனியாகவும் வழங்கவேண்டுமென்றும் குறிப்பிட்டு, அதற்கு ஆதரவாக மனுதார்கள் தரப்பில்,

1ம் மனுதார் தன்னை ம.சா.1ஆகவும், மாரியப்பன் என்பவரை ம.சா.2ஆகவும் விசாரித்துக்கொண்டும், ம.சா.ஆ.4, ம.சா.ஆ.5 மற்றும் ம.சா.ஆ.17 ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார்கள். மேலும், மேற்படி ம.சா.1, ம.சா.2 ஆகியோர்களின் சாட்சியங்கள் மற்றும் ம.சா.ஆ.4, ம.சா.ஆ.5 மற்றும் ம.சா.ஆ.17 ஆவணங்களை ஒருசேர ஆராய்கையில், வழக்கு விபத்தில் ஷை பொன்னுச்சாமி இறந்துபோயுள்ளார் என்பதும், இந்நிர் மனுதார்களில், 1 முதல் 5 மனுதார்கள்தான் ஷை பொன்னுச்சாமியின் சட்டக்கால் வாரிசுகள் என்பதும், இவ்வழக்கு விபத்தானது 1ம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட வாகனத்தினால்தான் ஏற்பட்டுள்ளது என்பதும், ஷை 1ம் எதிர்மனுதாரரின் வாகனமானது 3ம் எதிர்மனுதார் காப்பீட்டு கழகத்தில் காப்பீடு செய்யபப்பட்டு, ஷை காப்பீடானது விபத்து சமயத்தில் ஊர்ஜிதத்தில் இருந்துள்ளது என்பதும் புலனாகிறது. மேலும், எதிர்மனுதார்கள் ஷை சங்கதி குறித்து மறுத்து எவ்வித கட்சியும் செய்யாமலும், எவ்வித சாட்சிய, சான்றாவணங்களை முன்னிறுத்தாமலும், இவ்வாயத்தின் முன்பு தோன்றா தரப்பினராகியுள்ளார்கள்.

8. எனவே, வழக்கு விபத்தில் ஷை பொன்னுச்சாமி இறந்துபோயுள்ளார் என்பதையும், இந்த 1 முதல் 5 மனுதார்கள்தான் ஷை வழக்கு விபத்தில் இறந்துபோன பொன்னுச்சாமியின் சட்டக்கால் வாரிசுகள் என்பதையும், வழக்கு விபத்தில் சம்பந்தப்பட்ட ஈச்சர் வாகனமானது 1ம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்டது என்பதையும், ஷை வாகனமானது விபத்தின்போது 3ம் எதிர்மனுதார் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யபப்பட்டு, ஷை காப்பீடானது விபத்து சமயத்தில் அமலில் இருந்துள்ளது என்பதையும் மனுதார்கள் நிருபணம் செய்துள்ளார்கள் என இவ்வாயம் முடிவு செய்கிறது. எனவே, 1 முதல் 5 மனுதார்களுக்கு ஷை பொன்னுச்சாமியின் இழப்பிற்காக இழப்பீடு கிடைக்கத்தக்கது என்றும், ஷை இழப்பீட்டை எதிர்மனுதார்கள் கூட்டாகவும், தனியாகவும் செலுத்தக் கடமைப்பட்டவர்கள் என்றும் முடிவு செய்து, அவ்வாறே இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

9. <u>பிரச்சனை எண்.3-க்கான தீர்வு</u>:

அடுத்தபடியாக, மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய நியாயமான மற்றும் சரியான இழப்பீடு தொகை (Just and proper compensation) எவ்வளவு ? என்று ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. மாண்பமை உச்சநீதிமன்றமானது **2004(1)LW 1 STATE OF HARIYANA AND ANOTHER ..VS.. JASBIR KAUR AND OTHERS** என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு தீர்ப்பு பகர்ந்துள்ளது.

*" Statutory provision indicates that the compensation must be just and it cannot be bonanza; not a source of profit; but the same should not be pittance. The courts and tribunals have a duty to weigh the various factors and quantify the amount of compensation, which should be just. There can be no golden rule applicable to all cases for measuring the value of human life or a limb. Measure of damages cannot be arrived at by precise mathematical calculations. It would depend upon the particular facts and circumstances and attending peculiar or special features if any. It has further held that the word just denotes equitability, fairness and reasonableness and non arbitrary. If it is not so, it cannot be just.*

*10.* மேற்கண்ட முன்தீர்ப்பை பார்க்கும்போது மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்படும் இழப்பீடு என்பது பாதிக்கப்பட்ட நபருக்கு பெருஞ்செல்வத்தை *(*Bonanza*)* அள்ளித்தருவதாக அமைந்து விடக்கூடாது என்றும், ஆனால் அதே நேரத்தில் சொற்ப தொகையையும் (pittance) வழங்கிவிடக்கூடாது என்றும், தீர்ப்பாயங்கள் ஆராய்ந்தும் நீதியின் நலனைக் கருதியும் சரியான மற்றும் நியாயமான இழப்பீடு தொகையை நிர்ணயிக்க வேண்டுமேயொழிய தன் விருப்பத்திற்கேற்ப ஒருதலைபட்சமாக நிர்ணயிக்க கூடாது என்றும் தீர்ப்பு பகரப்பட்டுள்ளது நமக்கு தெளிவாகத் தெரியவருகிறது. மேற்கண்ட சட்ட கோட்பாடுகளை மனதில்கொண்டு இந்த

தீர்ப்பாயம் மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய நியாயமான மற்றும் சரியான (Just and proper compensation) எவ்வளவு என்று தீர்மானிக்க வேண்டியுள்ளது.

11. **சார்ந்து இருப்பவர்களுக்கு ஏற்பட்ட இழப்பீடு (Loss of dependency):**

**வருமானம்:**

சார்ந்து இருப்பவர்களுக்கான இழப்பீட்டை நிர்ணயம் செய்ய வேண்டுமெனில் இந்த வழக்கில் இறந்துபோன பொன்னுச்சாமியின் வயதானது நிரூபணம் செய்யப்பட வேண்டும். இறந்துபோன பொன்னுச்சாமி 43 வயதுடைய நபர் என மனுவில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், ம.சா.ஆ.4 ஆகக் குறியீடு செய்யப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கையில் ஷை பொன்னுச்சாமியின் வயது 42 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இம்மனுவில் ஷை பொன்னுச்சாமியின் வயது குறித்து நிர்ணயம் செய்ய எவ்வித ஆவணமும் மனுதார்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், விபத்தின்போது பொன்னுச்சாமிக்கு வயது 43 என்று மனுதார்கள் தங்களது மனுவில் குறிப்பிட்டிருந்தபோதிலும், ஷை விபத்தில் இறந்துபோன பொன்னுச்சாமியின் மனைவியும், 1ம் மனுதாருமான ம.சா.1, தனது சாட்சியத்தில், விபத்தில் இறந்துபோன பொன்னுச்சாமிக்கு விபத்தின்போது வயது 42 என சாட்சியமளித்துள்ளார். மேலும், எதிர்மனுதார்கள் ஷை சங்கதி குறித்து மறுத்து எவ்வித கட்சியும் செய்யாமலும், எவ்வித சாட்சிய, சான்றாவணங்களை முன்னிறுத்தாமலும், இவ்வாயத்தின் முன்பு தோன்றா தரப்பினராகியுள்ளார்கள். எனவே, விபத்தில் இறந்துபோன பொன்னுச்சாமிக்கு விபத்தின்போது வயது 42 என இவ்வாயம் முடிவு செய்கிறது.

12. வழக்கு விபத்தில் இறந்துபோன பொன்னுச்சாமி, பஞ்சுமிட்டாய் வியாபாரம் செய்து மாதம் ஒன்றுக்கு ரூ.18,000/- சம்பாதித்து வந்தார் என்று மனுதார்கள் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு ஆதரவாக, 1ம்

மனுதார் தன்னை ம.சா.1ஆக விசாரித்துக்கொண்டுள்ளார். மேலும், ம.சா.1 தனது சாட்சியத்தில், தன் கணவரான, விபத்தில் இறந்துபோன பொன்னுச்சாமி பஞ்சுமிட்டாய் வியாபாரம் செய்து, மாதம் ஒன்றுக்கு ரூ.18,000/- சம்பாதித்து வந்தார் என சாட்சியமளித்துள்ளார். ஆனால், அவ்வாறு ஷை பொன்னுச்சாமி மாதம் ஒன்றுக்கு ரூ.18,000/- சம்பாதித்து வந்தார் என்பதற்கு மனுதார்கள் தரப்பில் எவ்வித சான்றாவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, ஷை பொன்னுச்சாமியின் தோராய மாத வருமானத்தை இத்தீர்ப்பாயம் நிர்ணயம் செய்யவேண்டியுள்ளது. விபத்து நடந்த ஆண்டான 2018ம் ஆண்டின் கூலி, ஊதிய விபரங்களை கவனத்திற்கொண்டும், இறந்துபோன பொன்னுச்சாமியின் வயதையும், அவர் செய்து வந்த தொழிலையும் கருத்திற்கொண்டு பார்க்கும்போது, விபத்தில் இறந்துபோன ஷை பொன்னுச்சாமி தினமும் குறைந்தபட்சம் ரூ.250/- சம்பாதித்திருக்க எல்லாவித வாய்ப்பும் உள்ளதாக இவ்வாயம் கருதுகிறது. எனவே, ஷை பொன்னுச்சாமியின் தோராய மாத வருமானம் ரூ.7,500/- என நிர்ணயம் செய்வதே சரியானதாகவும், நியாயமானதாகவும் இருக்கும் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்து அவ்வாறே தீர்மானிக்கிறது.

13. **Future prospects:**

இறந்துபோன பொன்னுச்சாமியின் வயது 42 என ஏற்கனவே மேலே முடிவு செய்துள்ள நிலையில், **National Insurance Company Limited ..vs.. Pranay Sethi and others** என்ற முன்தீர்ப்பின் அடிப்படையில், மேற்படி பொன்னுச்சாமிக்கு வருங்கால வளமைக்காக (Future prospects) அவரின் தோராய மாத வருமானமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ரூ.7,500/-ல் 25 சதவிகித தொகையை கூட்டிக்கொள்ளவேண்டும். அதனடிப்படையில் மேற்படி பொன்னுச்சாமியின் தோராய மாத வருமானத்தை கணக்கிடுகையில் ரூ.9,375/- வருகிறது. அதன்படி ஷை பொன்னுச்சாமியின் ஆண்டு வருமானத்தை கணக்கிடுகையில் **ரூ.9,375/- x 12 = ரூ.1,12,500/-** என இத்தீர்ப்பாயம்

முடிவு செய்கிறது. மேற்படி தொகையில் இறந்துபோன பொன்னுச்சாமியின் வருமானத்தை நம்பி *1* முதல் **5** மனுதாரர்கள் வாழ்ந்து வரும் நிலையில், இறந்துபோன ஷை பொன்னுச்சாமியின் சொந்த செலவுக்காக ஷை தொகையில் நான்கில் ஒரு பங்கு (¼) தொகையை கழிக்கும்போது **ரூ.*84,375*/-** வருகிறது.

*14.* **<u>பெருக்கி (Multiplier)</u>** :

இறந்துபோனவரின் வயதானது விபத்தின்போது *42* என்பதால், மேற்படியாரின் வயதிற்கான **பெருக்கி *14*** என்பதால், இந்த வழக்கில் **பெருக்கி *14*-ஐ** எடுத்துக்கொண்டு கணக்கிடும்போது **ரூ.*84,375*/- x *14* = ரூ.*11,81,250*/- ஐ சார்ந்து இருப்பவர்களுக்கான இழப்பீடாக** வழங்கலாம் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

*15.* **<u>ஈமக்கிரியை மற்றும் சொத்து இழப்பிற்கான இழப்பீடு ( Funeral expenses and Loss of Estate) :</u>**

மாண்பமை உச்சநீதிமன்றமானது **National Insurance Company Limited ..vs.. Pranay Sethi and others** என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு தீர்மானித்துள்ளது.

*“61. In view of the aforesaid analysis , we proceed to record our conclusions:-*

*..............................................................................................................*

*(viii) Reasonable figures on conventional heads, namely, loss of estate, loss of consortium and funeral expenses should be Rs. 15,000/-, Rs. 40,000/- and Rs. 15,000/- respectively. The aforesaid amounts should be enhanced at the rate of 10% in every three years.”*

*16.* மேற்கண்ட தீர்முடிவின் அடிப்படையில், **ஈமக்கிரியை செலவு** என்ற தலைப்பின் கீழ் மனுதாரர்களுக்கு **ரூ.*15,000*/-** இழப்பீடாகக்

கிடைக்கக்கூடியது என்றும், **இல்லற துணை இழப்பு** என்ற தலைப்பின் கீழ் மனுதாரர்களுக்கு **ரூ.40,000/-** இழப்பீடாகக் கிடைக்கக்கூடியது என்றும், **சொத்திழப்பு** என்ற தலைப்பின்கீழ் மனுதாரர்களுக்கு **ரூ.15,000/-** கிடைக்கக் கூடியது என்றும் இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. மேலும், மனுதார்களுக்கு போக்குவரத்து செலவுக்காக **ரூ.5,000/-** கிடைக்கத்தக்கதாக உள்ளது என இவ்வாயம் முடிவு செய்கிறது.

*17*. மேலே கண்ட விவாதத்தின் அடிப்படையில் பார்க்கும்போது மனுதாரர்களுக்கு கீழ்க்கண்ட தொகை இழப்பீடாக கிடைக்கக்கூடியது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

| **வ. எண்** | **இழப்பீட்டிற்கான தலைப்புகள்** | **தொகை விவரம் ரூபாய்** |
|---|---|---|
| 01. | சார்ந்து இருப்பவர்களுக்கான இழப்பீடு | 11,81,250.00 |
| 02. | ஈமக்கிரியை | 15,000.00 |
| 03. | இல்லற துணை இழப்பு | 40,000.00 |
| 04. | சொத்து இழப்பீடு | 15,000.00 |
| 05. | போக்குவரத்து செலவு | 5,000.00 |
| | மொத்தம் | **ரூ.12,56,250.00** |

எனவே, *1* முதல் **5** மனுதாரர்களுக்கு நியாயமான மற்றும் சரியான இழப்பீட்டுத் தொகையாக **ரூ.12,56,250/-** கிடைக்கக்கூடியது என இத்தீர்ப்பாயம் முடிவு செய்து, அவ்வாறே இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

*18.* ***<u>தீர்வு 4</u>***

மனுதார்களுக்கு மனுச் செலவுத்தொகை கிடைக்கக்கூடியது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்து அவ்வாறே இப்பிரச்சினைக்கு இத்தீர்ப்பாயம் விடை காண்கிறது.

*19.* இறுதியாக, *(1)* மனு பகுதியாக ஒருதலைபட்சமாக அனுமதிக்கப்படுகிறது.

*(2)* 1 முதல் **5** மனுதாரர்களுக்கு, எதிர்மனுதாரர்கள் கூட்டாகவோ, தனித்தனியாகவோ இழப்பீடாக **ரூ.12,56,250/-**யும், ஷை தொகைக்கு மனு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதி வரையிலும் ஆண்டொன்றுக்கு 7.5% வட்டியும் மற்றும் இம்மனுவின் செலவுத்தொகையையும் சேர்த்து இன்றிலிருந்து 30 நாட்களுக்குள், இத்தீர்ப்பாயத்தின் நடப்பு வங்கி கணக்கான, இந்தியன் வங்கி, சங்கரன்கோவில் கிளையின் நடப்பு கணக்கு எண்.6455813233-ல் செலுத்த வேண்டும் என்றும், அவ்வாறு தொகை செலுத்தப்பட்ட விவரமானது இத்தீர்ப்பாயத்திற்குத் தெரியப்படுத்தப்பட வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

*(3)* ஷை தொகையில், 1ம் மனுதாருக்கு **ரூ.1,50,000/-**மும், 2,4,5 மனுதார்களுக்கு **தலா ரூ.3,50,000/-**மும் மற்றும் 3ம் மனுதாருக்கு **ரூ.56,250/-**மும் மேற்படி தொகைக்கான விகிதாச்சார வட்டி மற்றும் செலவுத் தொகையுடன் கிடைக்கக்கூடியது என்று உத்தரவிடப்படுகிறது.

*(4)* 1,2,3 மனுதாரர்களுக்குரிய பங்குத் தொகைகள் மற்றும் அதற்கான வட்டி மற்றும் விகிதாச்சார மனுச் செலவுத்தொகையையும் சேர்த்து 1,2,3 மனுதாரர்கள், இவ்வாயத்தில் தொகை செலுத்தப்பட்டவுடன், உடனடியாக பெற்றுக்கொள்ளலாமென்று உத்தரவிடப்படுகிறது.

*(5)* 4,5 இளவர் மனுதார்களுக்குரிய பங்குத் தொகையானது ஷை இளவர்கள் தகுந்த வயதடையும் வரையில் 4,5 மனுதாரர்கள் வைத்துள்ள நாட்டுடமையாக்கப்பட்ட வங்கியில் வைப்பீடு செய்யப்படவேண்டுமென்றும்,

யை தொகைக்குரிய வட்டியை மட்டும் 6 மாதங்களுக்கொருமுறை 4,5 மனுதாரர்களின் வங்கி கணக்கிற்கு பரிமாற்றம் செய்யப்பட்டு பெற்றுக்கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது.

*(6)* மனுதாரர்கள் தங்களுக்கு கிடைத்த இழப்பீட்டுத்தொகைக்குரிய நீதிமன்றக் கட்டணத்தை இன்றிலிருந்து *10* நாட்களுக்குள் இவ்வாயத்தில் செலுத்தவேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

*(7)* இம்மனுவானது 6ம் மனுதாரைப் பொறுத்து செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்யப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்தருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, **2022ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19ம் நாள்** அவையறிய பகரப்பட்டது.

S CHANDRA SEKAR
Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2022.10.19 18:31:34 +0530

இயக்க ஊர்தி விபத்துக் கோரிக்கை
தீர்ப்பாய நடுவர், சங்கரன்கோவில்,

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>**

| | |
|---|---|
| ம.சா.*1* | திருமதி. பாப்பாத்தி *(1*ம் மனுதார்*)* |
| ம.சா.*2* | திரு. மாரியப்பன் |

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.*1* | *09.03.2018* | முதல் தகவல் அறிக்கையின் உண்மை ஒளிநகல் |
| ம.சா.ஆ.*2* | *09.03.2018* | பார்வைமகசரின் உண்மை ஒளிநகல் |
| ம.சா.ஆ.*3* | *09.03.2018* | மாதிரிவரைபடத்தின் உண்மை ஒளிநகல் |
| ம.சா.ஆ.*4* | *10.03.2018* | சடலக்கூறாய்வு அறிக்கையின் உண்மை ஒளிநகல் |
| ம.சா.ஆ.*5* | *19.03.2018* | இயக்க ஊர்தி ஆய்வாளரின் ஆய்வறிக்கைகளின் சான்றிட்ட ஒளிநகல்கள் |
| ம.சா.ஆ.*6* | - | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட 1ம் மனுதாரின் ஆதார் அடையாள அட்டையின் ஒளிநகல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.7 | - | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட 1ம் மனுதாரின் வங்கி சேமிப்பு கணக்கு புத்தகத்தின் முதல்பக்க ஒளிநகல் |
| ம.சா.ஆ.8 | - | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட 2ம் மனுதாரின் ஆதார் அடையாள அட்டையின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.9 | - | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட 2ம் மனுதாரின் வங்கி சேமிப்பு கணக்கு புத்தகத்தின் முதல்பக்க ஒளிநகல் |
| ம.சா.ஆ.10 | - | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட 3ம் மனுதாரின் ஆதார் அடையாள அட்டையின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.11 | - | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட 3ம் மனுதாரின் வங்கி சேமிப்பு கணக்கு புத்தகத்தின் முதல்பக்க ஒளிநகல் |
| ம.சா.ஆ.12 | - | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட 4ம் மனுதாரின் ஆதார் அடையாள அட்டையின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.13 | - | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட 4ம் மனுதாரின் வங்கி சேமிப்பு கணக்கு புத்தகத்தின் முதல்பக்க ஒளிநகல் |
| ம.சா.ஆ.14 | - | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட 5ம் மனுதாரின் ஆதார் அடையாள அட்டையின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.15 | - | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட 6ம் மனுதாரின் ஆதார் அடையாள அட்டையின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.16 | - | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட 6ம் மனுதாரின் வங்கி சேமிப்பு கணக்கு புத்தகத்தின் முதல்பக்க ஒளிநகல் |
| ம.சா.ஆ.17 | 02.09.2022 | சிவகிரி, மாவட்ட உரிமையியல் நீதிமன்ற, அசல் வழக்கு எண்.67/2021 வழக்கில் மக்கள் நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் சான்றிட்ட உண்மை நகல் |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>** இல்லை

**<u>எதிர்மனுதார்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>** இல்லை

S CHANDRA SEKAR

Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2022.10.19 18:31:45 +0530

இயக்க ஊர்தி விபத்துக் கோரிக்கை
தீர்ப்பாய நடுவர், சங்கரன்கோவில்.

**இயக்க ஊர்தி விபத்துக் கோரிக்கை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) சங்கரன்கோவில்**

**இயக்க ஊர்தி விபத்துக் கோரிக்கை அசல் மனு எண்.83/2019**

**தீர்வளிப்பு (அசல்/வரைவு)**

**நாள்: 19.10.2022**